NP

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.
ந.க.எண். 028490/இ1/2024, நாள்.17.06.2025

பொருள்: தொடக்கக் கல்வி- வழக்கு – தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனுமதிக்கப்பட்ட பாடப் பிரிவுகளைத் தவிர ஏனைய பாடங்களில் உயர்கல்வி பயின்றமைக்கு ஊக்க ஊதியம் வழங்க திரு.எஸ்.தாஹா முகம்மது என்பார் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் தொடர்ந்த வழக்கு W.P.(MD)No.22704/2018 – 20.01.2025 அன்று இறுதி தீர்ப்பாணை வழங்கப்பட்டது – ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை:
1. சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் தொடர்ந்த வழக்கு W.P.(MD)No.22704/2018, தீர்ப்பாணை நாள்.20.01.2025.
2. சென்னை-9, தலைமைச் செயலகம், பள்ளிக் கல்வித் துறை, நேர்முகக் கடித எண்.11527/EE1(2)/2024-4 dated: 16.06.2025.
3. சென்னை-6, தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.017731/இ1/2015, நாள்.24.08.2016.
4. சென்னை-6 தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண். 028490/இ1/2024. நாள்.19.05.2025 மற்றும் 06.06.2025.
5. அரசாணை (நிலை) எண்.134, பள்ளிக் கல்வித் (ஜி2) துறை, நாள்.15.06.2007.

-.-.-.-.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் கல்வி மாவட்டம், திருவாடனை ஒன்றியம், முகிழ்தகம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் (ஆங்கிலம்) பணிபுரியும் திரு.எஸ்.தாஹா முகம்மது என்பவர் M.Com உயர்கல்வி பயின்றமைக்கு ஊக்க ஊதியம் வழங்க கோரி தொடர்ந்த வழக்கில் 16.12.2024-ல் கீழ்காணுமாறு இடைக்காலத் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

4. In view ofthis submission made by the petitioner's Counsel, the learned Additional Government Pleader is directed to get instructions as to

i) Whether any BT Assistant / Secondary Grade Teacher is being provided with incentive increment for their additional qualification of M.Com / M.A (Economics) throughout the state? and

ii) if so, how many such persons are receiving the incentives and what is the stand of Government in so far as such persons are concerned?

Padasalai.Net

21.01.2025-ல் கீழ்காணுமாறு இறுதி தீர்ப்பாணை வழங்கப்பட்டது.

"9.In view of the foregoing reasons and discussions, this writ petition is dismissed. Hope the Government shall find out the ineligible teachers, who are receiving incentive increments for their higher qualification without any relevancy and to take appropriate action to recover the same, as it is a loss to the public exchequer. No costs. Consequently, connected Miscellaneous Petitions are closed.

List this writ petition on 21.03.2025, for reporting compliance by the Government. என தெரிவிக்கப்பட்டது"

மேற்காணும் தீர்ப்பாணையின்படி தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனுமதிக்கப்பட்ட பாடப் பிரிவுகளைத் தவிர ஏனைய பாடங்களில் உயர்கல்வி பயின்றமைக்கு வழங்கப்பட்ட ஊக்க ஊதியத்தினை தீர்ப்பாணையில் தெரிவித்துள்ளவாறு மறு ஊதிய நிர்ணயம் செய்ய பணிப் பதிவேடு வாரியாக ஆய்வு செய்து இத்துடன் கீழ்கண்ட படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பூர்த்தி செய்து சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்டு மாவட்டம் மற்றும் பதவி வாரியாக ஊக்க ஊதிய உயர்வு பெற்றவர்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | மாவட்டம் | பதவியின் விவரம். | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | இ.நி.ஆ | தொ.ப. தலைமை ஆசிரியர் | பட்டதாரி ஆசிரியர் | ந.நி. பள்ளி தலைமை ஆசிரியர் | வட்டாரக் கல்வி அலுவலர் |
| 1. | அறந்தாங்கி | 10 | 2 | 7 | 3 | 0 |
| 2. | அரியலூர் | 4 | 3 | 1 | 1 | 0 |
| 3. | செங்கல்பட்டு | 5 | 3 | 1 | 1 | 1 |
| 4. | சென்னை | 0 | 0 | 0 | 0 | 0 |
| 5. | செய்யார் | 0 | 1 | 0 | 0 | 0 |
| 6. | கோயமுத்தூர் | 14 | 2 | 7 | 1 | 2 |
| 7. | கடலூர் | 8 | 3 | 3 | 0 | 0 |
| 8. | தேவகோட்டை | 5 | 3 | 1 | 1 | 0 |
| 9. | தாராபுரம் | 12 | 8 | 2 | 1 | 0 |
| 10. | தருமபுரி | 2 | 1 | 1 | 2 | 0 |
| 11. | திண்டுக்கல் | 3 | 2 | 6 | 1 | 2 |
| 12. | ஈரோடு | 9 | 0 | 6 | 0 | 1 |
| 13. | கோபிசெட்டிபாளையம் | 5 | 1 | 0 | 0 | 1 |
| 14. | அரூர் | 1 | 0 | 0 | 1 | 0 |
| 15. | ஒசூர் | 5 | 3 | 4 | 1 | 0 |
| 16. | கள்ளக்குறிச்சி | 16 | 0 | 5 | 2 | 1 |
| 17. | காஞ்சிபுரம் | 2 | 0 | 0 | 1 | 0 |
| 18. | கன்னியாகுமரி | 1 | 2 | 2 | 0 | 0 |
| 19. | கரூர் | 18 | 3 | 5 | 2 | 0 |
| 20. | கோவில்பட்டி | 3 | 2 | 1 | 0 | 0 |
| 21. | கிருஷ்ணகிரி | 0 | 0 | 3 | 0 | 0 |
| 22. | மதுரை | 9 | 4 | 6 | 7 | 0 |
| 23. | மயிலாடுதுறை | 7 | 1 | 0 | 4 | 0 |
| 24. | முசிறி | 12 | 2 | 4 | 0 | 0 |

E:\2025\E1\Incentive Increment\028490 _ Thaha Mohamed.doc

Padasalai.Net

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25. | நாகப்பட்டினம் | 6 | 1 | 1 | 1 | 0 |
| 26. | நாமக்கல் | 16 | 8 | 6 | 3 | 0 |
| 27. | ஒட்டன்சத்திரம் | 6 | 1 | 0 | 0 | 1 |
| 28. | பரமக்குடி | 3 | 1 | 2 | 1 | 0 |
| 29. | பட்டுக்கோட்டை | 2 | 0 | 5 | 2 | 0 |
| 30. | பெரம்பலூர் | 3 | 0 | 1 | 0 | 0 |
| 31. | பொள்ளாச்சி | 4 | 1 | 2 | 0 | 0 |
| 32. | பொன்னேரி | 7 | 2 | 3 | 2 | 0 |
| 33. | புதுக்கோட்டை | 4 | 8 | 2 | 1 | 0 |
| 34. | இராமநாதபுரம் | 3 | 0 | 2 | 1 | 0 |
| 35. | இராணிப்பேட்டை | 7 | 5 | 2 | 4 | 0 |
| 36. | சேலம் | 13 | 3 | 7 | 6 | 2 |
| 37. | சிவகங்கை | 2 | 0 | 4 | 1 | 0 |
| 38. | சிவகாசி | 9 | 5 | 1 | 1 | 0 |
| 39. | தென்காசி | 4 | 0 | 5 | 2 | 0 |
| 40. | தஞ்சாவூர் | 16 | 6 | 3 | 2 | 0 |
| 41. | தாரமங்கலம் | 6 | 5 | 5 | 0 | 0 |
| 42. | நீலகிரி | 3 | 1 | 1 | 1 | 1 |
| 43. | தேனி | 6 | 0 | 4 | 4 | 0 |
| 44. | திருமங்கலம் | 10 | 1 | 3 | 1 | 0 |
| 45. | திருவாரூர் | 11 | 5 | 11 | 2 | 0 |
| 46. | தூத்துக்குடி | 2 | 2 | 0 | 3 | 0 |
| 47. | திண்டிவனம் | 6 | 5 | 3 | 2 | 0 |
| 48. | திருச்சிராப்பள்ளி | 5 | 1 | 1 | 0 | 0 |
| 49. | திருநெல்வேலி | 3 | 1 | 1 | 1 | 0 |
| 50. | திருப்பத்தூர் | 3 | 1 | 2 | 1 | 0 |
| 51. | திருப்பூர் | 6 | 3 | 5 | 0 | 0 |
| 52. | திருவள்ளூர் | 10 | 6 | 3 | 4 | 0 |
| 53. | திருவண்ணாமலை | 5 | 1 | 4 | 2 | 0 |
| 54. | வள்ளியூர் | 0 | 0 | 0 | 0 | 0 |
| 55. | வேலூர் | 9 | 4 | 7 | 5 | 0 |
| 56. | விழுப்புரம் | 16 | 5 | 6 | 0 | 0 |
| 57. | விருதாச்சலம் | 9 | 0 | 5 | 0 | 0 |
| 58. | விருதுநகர் | 3 | 0 | 2 | 1 | 0 |
| | மொத்தம் | 369 | 128 | 174 | 83 | 12 |

தொடக்கக் கல்வித் துறையைப் பொறுத்த வரையில் கற்பிக்கப்படாத இதர பாடங்களில் உயர்கல்வி பயின்றமைக்கு ஊக்க ஊதிய உயர்வு பெறுவது குறித்து அரசிடமிருந்து எவ்வித அரசாணைகளோ, அரசுக் கடிதங்களோ மற்றும் வழிகாட்டுதல்களோ இதுவரை வெளியிடப்படவில்லை. பார்வை 5-ல் காணும் அரசாணையில் முன்னுரிமை இருந்தும் இதுவரை நியமனத்திற்கு தகுதி பெறாத பொருளாதாரம், வணிகவியல் போன்ற பாடங்களில் 01.01.2007 அன்றைய நிலவரப்படி பட்டம் பெற்றவர்களுக்கு நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகவும், பட்டதாரி ஆசிரியர்களாகவும், பதவி உயர்வு மட்டும் அளிக்கலாம் எனவும், 01.01.2007-க்குப் பிறகு இதர பாடங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு மேற்படி பதவி உயர்வு சலுகை நீட்டிக்கப்படமாட்டாது என்ற நிபந்தனைக்குட்பட்டு பதவி உயர்வு வழங்கலாம் என ஆணையிடப்பட்டது.

மேற்காணும் அரசாணையின்படி பார்வை 3-ல் காணும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் பின்வருமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

padasalai.Net

தொடக்கக் கல்வியின் கீழ் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் / தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது கல்வித் தரத்தை உயர்த்திக் கொள்ள 1 முதல் 8-ம் வகுப்பு வரை கற்பிக்கும் முதன்மைப் பாடங்களான (தமிழ், ஆங்கிலம், அறிவியல், கணக்கு, சமூக அறிவியல்) பாடங்களை பட்டப் படிப்பில் பயின்று உயர்கல்வி தகுதி பெற்றால் மட்டுமே, ஊக்க ஊதிய உயர்வு பெற இயலும். இதனைத் தவிர்த்து பிற பாடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்படாத நிலையில் 1 முதல் 8 வகுப்புகளுக்கு கற்பிக்கப்படாத பாடங்களைப் பயின்று தேர்ச்சி பெற்றிருந்தால் அவ்வாசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வோ, பதவி உயர்வோ, வழங்க இயலாது என அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், தவறுதலாக ஊக்க ஊதியம் அனுமதிக்கப்பட்டது ஏற்புடையதல்ல.

எனவே பார்வை 2-ல் காணும் அரசு நேர்முகக்கடிதத்தில், பார்வை 1-ல் காணும் 21.01.2025 நாளிட்ட தீர்ப்பாணையினை செயல்படுத்தி அனுமதிக்கப்பட்ட பாடங்களைத் தவிர இதர பாடங்களை பயின்று தவறுதலாக உயர்கல்விக்கான ஊக்க ஊதியத் தொகையினை பெற்று வரும் ஆசிரியர்களிடமிருந்து உரிய அலுவலர் அளவில் அத்தொகையினை பிடித்தம் செய்து, அதன் விவரத்தினை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும், மேலும், இவ்வாறு தவறுதலாக ஊதியம் நிர்ணயம் செய்த அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தினையும் 20.06.2025-க்குள் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 1-ல் காணும் தீர்ப்பாணை மற்றும் பார்வை 2-ல் காணும் அரசுக் கடிதத்தின்படி, மேற்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மாவட்டங்களைச் சார்ந்த ஆசிரியர்களிடமிருந்து தவறுதலாக வழங்கிய ஊக்க ஊதிய உயர்வுக்காக, அதிகம் பெற்ற ஊதியத்தினை, திரும்ப அரசு கணக்கில் செலுத்தப்படும் வகையில், தனிக்கவனம் செலுத்தி, எவ்வித காலதாமதமும் செய்யாமல், திருத்திய ஊதிய நிர்ணய ஆணையினை வழங்கிவிட்டு, எவரது பெயரும் விடுபடாமல் பெயர்ப் பட்டியலுடன் ஆணையின் நகலினை 20.06.2025-க்குள் தனிநபர் மூலம் இவ்வியக்கக "இ" பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தொடக்கக்கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தவறுதலாக ஊக்க ஊதிய உயர்வு வழங்கிய அலுவலர், கண்காணிப்பாளர் மற்றும் இருக்கைப் பணியாளர் அனைவரின் மீதும் விதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, அதன் விவரத்தினை உடன் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறும், இதில் ஏதேனும் காலதாமதம் ஏற்படும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்குநர்

17/6/25

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
(தொடக்கக் கல்வி).

17/6

E:\2025\E1\Incentive Increment\028490 _ Thaha Mohamed.doc

Padasalai.Net